**தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, தொல்பொருளியல் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தொல்பொருளியல் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கை நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல். | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.<br>2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை<br>3. உள்ளகக் கணக்காய்வில் காணப்பட்ட குறைபாடுகள்<br>4. ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை | 2.2.1<br>2.12<br>2.13<br>2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பணக் கணக்குகளின் குறைபாடுகள் | 2.9 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்கு காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.4 |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் (இங்கு சிக்கனம் என்பதால் கருதப்படுவது மதிப்பீடு செய்யப் பட்ட செலவினத்தை மேற்கொள் வதல்ல, செலவிடப்பட்ட பணத்தின் மூலம் அரசிற்கு உயர்ந்த பெறுமதி கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்துதல்) | 1. போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்<br>2. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளாமை.<br>3. செயற்திட்டம் நிறைவேற்று வதில் தாமதம் | 2.2.2(அ),(ஆ)<br>2.2.2(இ)<br>2.2.2(ஈ) |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை | 1. நட்டங்களும் சேதங்களும்<br>2. அரசாங்க உத்தியோகத்தர்களை பிணை வைத்தல் | 2.6<br>2.15 |

கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ உழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும்

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான செய்பணிகள்

- இலங்கையில் தொல்பொருளியல் சார் உரிமையை இனங்காணல்.
- இலங்கையில் அசையும் மற்றும் அசையாத தொல்பொருளியல் சார் உரிமைகளை ஆவணப்படுத்தல்.
- தொல் பொருளியல் சார் உரிமையை ஒழுக்காற்று முறையில் பாதுகாத்தல், பராமரித்து பேணல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்.
- தொல் பொருளியல் கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தல்.
- கலாச்சாரம் சார் ஆதனச் சட்டத்தை செயற்படுத்துதல்.
- தொல்பொருளியல் இடங்கள் மற்றும் ஞாபகர்த்த சிலைகள் பொதுமக்களுக்கு சமர்பித்தல்.
- பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது தொல்பெருளியல் சார் பெறுமதியுடைய இடங்களுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக சேதங்களை மதிப்பீடு செய்யும் கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளல்.

### 2.2 செயலாற்றல்

#### 2.2.1 திட்டமிடல்

எதிர்பார்க்கப்பட்ட பிரதான கருமங்களை நிறைவேற்றக்கூடிய விதமாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருக்கவில்லை. மத்திய கலாச்சார நிதியத்தில் இருந்து தொல்பொருளியல் பாதுகாப்பு கருமங்களுக்காக கிடைக்கின்ற நிதியங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நெருங்குவது தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

#### 2.2.2 செய்பணிகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்**

தொல்பொருளியல் திணைக்களத்தின் பிரதான கருமம் ஒன்றாகிய இலங்கையில் அசையும் மற்றும் அசையாத தொல்பொருளியல் சார் உரிமைகள் ஆவணப்படுத்துதல் ஆகிய பிரதான கருமம் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என பின்வரும் விடயங்களின் மூலம் கண்டறியப்பட்டன.

(i) மாத்தளை சரித்திர புகழ் பெற்ற மெக்டோவல் அதிகார கோட்டை தொல்பொருளியல் பாதுகாப்பு ஞாபகர்தத சின்னம் ஒன்றாக பதிவு செய்வதற்காக 2013 ஜனவரி 31 ஆம் திகதி பிரதிபணிப்பாளர் (மத்திய) இனால்

தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையொன்று சமர்பித்திருந்த போதிலும் 2017 வருட இறுதிவரை இது பாதுகாப்பு சின்னப் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ii) தொல்பொருளியல் பாதுகாப்பு ஞாபகர்த்த சின்னம் ஆக வெளியிடப்பட வேண்டுமென திணைக்களம் தீர்மானித்திருந்த கட்டடக் கலை ஒன்றாக மதிப்பளிக்கப்பட்ட 130 ஆண்டுகள் பழமைவாய்ந்த கொம்பனித்தெரு சொய்சா கட்டிடம் 2018 ஆண்டு வரை பாதுகாப்பு ஞாபகர்த்த சின்னமாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. தற்போது இந்த கட்டடம் உடைத்து அகற்றக்கூடிய அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருந்தது.

**(ஆ) தொல்பொருளியல் நிலங்கள் வர்த்தமானிய பிரசுரிக்காமை அங்கீகாரம் இன்றி தனதாக்கல் சேதமடைதல்**

தொல்பொருளியல் நிலங்களை வர்த்தமானிய பிரசுரிக்காமை , அங்கீகாரம் இன்றி தனதாக்கல், சேதமடைதல் தொடர்பாக 8 மாகாணங்களில் இருந்து பெற்றிருந்த தகவல்களை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மாகாணம்/ மாவட்டம் | எல்லை அடை யாளப்படுத்தப்பட்டு எல்லை தூண்கள் நடப் படாத தொல் பொருளியலின் எண்ணிக்கை | ஆவணப்படுத்தப்படாத தொல் பொருள் இடங்களின் எண்ணிக்கை | வர்த்தமானி படுத்தப்படாத தொல் பொருளியல் இடங்கள் | கண்டுபிடிக்கப்படாத தொல் பொருளியல் இடங்கள் | அங்கீகாரம் இன்றி குடியிருத்தல் அறியப்பட்ட தொல் பொருளியல் இடங்கள் | தொல் பொருளியல் சார்ந்த சின்னங்களுக்கு சேதங்கள் ஏற்படல் | இதுவரை கண்டுபிடிக்கப்படாத இனங்கண்ட தொல் பொருளியல் காப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| <u>வடக்கு</u> | | | | | | | |
| யாழ்பாணம் | 79 | - | 15 | - | 03 | 01 | - |
| கிளிநொச்சி | 18 | 15 | 15 | 15 | - | - | - |
| மன்னார் | 18 | - | - | - | 02 | 02 | - |
| <u>கிழக்கு</u> | | | | | | | |
| மட்டக்களப்பு | - | 05 | 05 | 05 | - | 05 | - |
| அம்பாரை | - | - | - | - | 25 | 22 | 186 |
| <u>வடமத்திய</u> | | | | | | | |
| அநுராதபுரம் | 38 | - | 03 | - | 04 | 25 | - |
| <u>மத்திய</u> | | | | | | | |
| கண்டி | 06 | - | - | - | 03 | - | - |
| நுவரெலியா | 05 | - | - | - | - | - | - |
| மாத்தளை | 25 | - | - | 02 | 05 | - | - |
| <u>தெற்கு</u> | | | | | | | |
| ஹம்பந்தோட்டை | 11 | 01 | - | 11 | 06 | 07 | - |
| காலி | - | - | - | - | 21 | 02 | - |
| மாத்தறை | - | - | - | - | - | 04 | - |
| <u>ஊவா</u> | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மொனராகலை | 29 | 16 | 16 | 09 | 22 | 09 | - |
| **வடமேல்** | | | | | | | |
| புத்தளம் | 02 | - | - | 02 | 04 | - | - |
| குருநாகல் | 10 | - | - | - | 13 | 15 | - |
| **சப்ரகமுவ** | | | | | | | |
| இரத்தினபுரி | 18 | - | - | 06 | 11 | - | - |
| | -------- | ---------- | ------------ | ---------- | ---------- | --------- | --------- |
| மொத்தம் | 259 | 37 | 54 | 50 | 119 | 92 | 186 |
| | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) 259 தொல் பொருளியல் இடங்களின் எல்லைகளை அடையாளப்படுத்தி யிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் யாழ்பாண மாவட்டத்தில் மாத்திரம் அந்த எண்ணிக்கை சுமார் 79 காணப்பட்டது.

(ii) பதிவு செய்யப்படாத 37 தொல்பொருளியல் இடங்கள் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் வர்த்தமானி பிரசுரிக்கப்படாத சுமார் 54 இடங்கள் காணப்பட்டன.

(iii) கண்டுபிடிக்கப்படாத 50 எண்ணிக்கையான தொல்பொருளியல் இடங்கள் காணப்பட்டதென கண்டறியப்பட்டதுடன் அங்கீகாரமின்றி குடியிருப்பதனால் தொல்பொருளியல் காப்புக்கள் மற்றும் 119 தொல்பொருளியல் ஞாபகர்த்த சின்னங்கள் சேதமளிக்கப்பட்டிருந்ததென அறியப்பட்டிருந்தது. அங்கீகாரமின்றிய பயிர் செய்கை அலுவல்கள், அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலைகள், அங்கீகாரம் இன்றிய குடியிருத்தல் ஆகியன இதற்கு காரணமாக இருந்தன. எவ்வாறாயினும் அந்த ஒவ்வொரு சந்தர்பத்திலும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(iv) தொல்பொருளியல் இடங்களில் புதையல் கள்வர்களினால் மேற்கொள்ளப்படும் சட்டரீதியற்ற தோண்டுதல் அலுவல்கள், கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் கற்குழிகள் கடாத்துதல் போன்ற அலுவல்களினால் சுமார் 92 தொல் பொருளியல் இடங்கள் அழிந்திருந்த போதிலும் அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) தொல்பொருளியல் இடங்கள் என இனங்கண்டிருந்த போதிலும் காப்புக்கள் மற்றும் ஞாபகர்த்த சின்னங்கள் என பதிவு செய்யப்பட்டிருக்காத மற்றும் எல்லை தூண்கள் போடப்பட்டிருக்காத சுமார் 186 தொல்பொருளியல் சார் இடங்கள் அம்பாறை மாவட்டத்தில் காணப்பட்டது என அறியப்பட்டது. இந்த இடங்களில் பாதுகாப்புத் தூண்கள் போடப்பட்டு வர்த்தமானியின் மூலம் தொல்பொருள் இடங்கள் என வர்த்தமானியிடப்படவதற்கு இலக்காகிய திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை.

(vi) திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்ட பதவியணியின் மூலம் தொல்பொருளியல் ஞாபகர்த்த சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் காப்புகளை பாதுகாப்பதற்கு ஈடுபடுத்தக் கூடிய ஊழியர்கள் போதியளவினதாக காணப்படாமையால் 200 சிவில் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்துவதற்கு தீர்மானித்திருந்த போதிலும் மேல் மாகாணம் மற்றும் இன்னும் 06 மாவட்டங்களில் சுமார் 105 பேர் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(vii) பொலன்னறுவை மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கான தொல்பொருளியல் பூமிகளில் 12 அங்கீகாரம் இன்றிய குடியிருப்பினர் காணப்படுவதாக தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

**(இ) எதிர்பார்க்கப்படாத வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

(i) 2017 ஆண்டின் போது ரூபா 29,272,045 இற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு விஷேட செயற்திட்டமொன்றாக செயற்படுத்தப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்டபிடிப்பு செயற்திட்டத்தில் 648 தொல்பொருளியல் இடங்கள் இனங்கண்டிருந்ததுடன் அந்த இடங்கள், அந்த செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகிய இனங்கண்டிருந்த தொல்பொருளியல் இடங்கள் ஞாபகர்த்த சின்னங்கள் மற்றும் காப்பு நிலங்கள் என பகிரங்கப்படுத்தி எல்லை தூண்கள் போடப்பட்டு பாதுகாக்கும் கருமம் 2018 செப்டம்பர் வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆண்டின் போது கண்டுபிடிக்கப்பட்ட 26 தொல் பொருளியல் இடங்களுக்கான அட்டவணை ஒன்று தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொல்பொருளியல் இடங்கள் என வெளியிடப்படுவதாகவும் அது தொடர்பாக எதிர்ப்புக்கள் காணப்படின் சமர்பிக்கும்படியும் 2017 மார்ச் 20 திகதி 2011/06 ஆம் இலக்க விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டிருந்தது. எனினும் எதிர்புக்கள் சமர்பிக்கப்படாதிருந்த போதும், 2017 செப்டம்பர் 15 திகதி அனைத்து சரி செய்தல்களின் பின்னர வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அமைச்சரின் கையொப்பத்திற்கு சமர்பித்திருந்த போதிலும், 2018 செப்டம்பர் வரையும் அவ்விடயத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

**(ஈ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

(i) குண்டசாலை சுற்றுலா விடுதியின் கூரையின் ஒரு பகுதி தீவிரமாக உக்கியிருந்த அதனை திருத்துதல் மற்றும் பராமரித்தல் அலுவல்களுக்காக 2017 ஆண்டின் போது ரூபா 2.5 மில்லியன் தொகையொன்று ஒதுக்கியிருந்த போதிலும், பெறுகை செயன்முறையில் ஏற்பட்டிருந்த குறைபாடுகள் காரணமாக 2017 ஆண்டின் போது இந்த திருத்த வேலை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) களனி சுவர் ஓவியங்கள் கிரந்தத்தை அச்சிடுவதற்கான மத்திய கலாச்சார நிதியத்தினால் ரூபா 8 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த போதிலும் 2017 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த இந்த செயற்திட்டம் 2018 செப்டம்பர் வரை பூர்த்தி செய்திருக்கவில்லை.

**(உ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமொன்றினை பெற்றிருக்காத செயற்திட்டங்கள்**

(i) ரிடிகல தொல்பொருளியல் அலுவலக கட்டிடம் ஒன்றிற்கான 2016 திசெம்பர் 31 திகதி ரூபா 10 மில்லியனிற்கான ஏற்பாடுகள் பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு வழங்கியிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் மாத இறுதிவரையும் முன்னேற்றமொன்றினை பெற்றிருக்கவில்லை.

(ii) 2016 ஆண்டில் திட்டமிடப்பட மேற்கூறிய கருமம் நிறைவேற்றப்படாத காரணத்தினால் 2017 ஆண்டின் போது ரிடிகல தொல்பொருளியல் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 4.5 மில்லியனிற்கான பாதீட்டு நிதி ஏற்பாடுகளின் மூலமும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

**2.2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்டம்பர் 12 திகதி 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவேண்டும் எனினும், அந்த அறிக்கை 2018 செப்டம்பர் 12 திகதி வரையும் பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

**2.2.4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரழ்'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

**2.3 பெறுகை செயன்முறையினூடாக வழங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக கொள்ளல்**

திணைக்களத்தினால் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 16.7 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 14.9 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளில் ரூபா 1.7 மில்லியன் அதாவது 10 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(அ) சொத்துக்களை ஆவணப்படுத்தல்**

(i) நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கை தயாரிக்கும் போது ஒரு செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 35,085,398 இற்கான மூலதனச் சொத்துக்களின் தனதாக்கல் மற்றும் நடைபெறு வேலைகள் உட்படுத்தப்படடிருக்கவில்லை.

(ii) பல வருட காலமாக முதலீடுகளின் கீழ் உள்ள மூலதன சொத்துக்கள் தனதாக்கல் உட்படுத்தியிருக்கவில்லை. அதன் காரணமாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கையின் மூலம சரியான சொத்துக்கள் காட்டப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது.

(iii) 2017 ஜுன் 28 திகதி 01/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் காணப்படும் கொம்ப்டோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்பித்திருந்த சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையில் 2003 மற்றும் 2004 ஆண்டுகளின் போது கொல்வனவு செய்திருந்த 56 மோட்டார் வாகனங்கள் தொடர்பாக விபரங்கள் உட்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) வாகனப் பயன்பாடு**

----------------------------------

(i) 2016 திசெம்பர் 29 திகதி 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இன் பிரகாரம் அனைத்து வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட வேண்டுமெனினும் ஓட்ட நிலையில் காணப்பட்ட 38 வாகனங்களில 28 வாகனங்களின் எரிபொருள் எரிதல் மீதாக பரிசோதிக்கபபட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் தனது பொறுப்பிளுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பாக வாகனத்தின் வகை, மாதிரி, பதிவு இலக்கம், சாரதிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அல்லது சாட்டபட்ட திகதிகள் ஆகிய விபரங்கள் காட்டும் பட்டியல் ஒன்று வைத்திருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 802(3) இன் பிரகாரம் வாகனம் கொள்வனவு செய்த திகதி, விலை, வரலாறு இடையே மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகள், அதற்கான செலவுகள், செயற்படாதிருந்த காலம் தொடர்ச்சியான பரிசோதனைகள், சேவைகள் மற்றும் பராமரிப்பு மேற்கொண்ட நாட்கள், அதற்கான செலவுகள் மேற்கொண்டிருந்ததால் அவையும் பதியப்பட வேண்டுமெனினும் தொல்பொருளியல் திணைக்களத்தினால் அவ்வாறு தகவல்கள் பதிவேடு ஒன்றில் பதித்தருக்கவில்லை.

(iv) நிதிப் பிரமாணம் 1646 இன் பிரகாரம் மாதாந்த பொழிப்பு மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தொடரந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதி முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பட வேண்டுமெனினும் அந்த அறிவுரையை கடைபிடித்திருக்கவில்லை.

(v) நிதிப் பிரமாணங்கள் 1645(அ) பிரகாரம் முறையாக மற்றும் முறைசார்விதமாக வாகன சம்பவ குறிப்பேடு பேணப்பட வேண்டியிருந்த போதிலும் தொல் பொருளியல் திணைக்களம் அவ்வாறு சம்பவ குறிப்பேடு முறைப்படி பேணியிருக்கவில்லை.

(vi) 1992 ஆகஸ்ட் 19 திகதி 26/92 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச இலட்சினம் பதிக்கப்பட வேண்டிய வாகனங்களுக்காக அரச இலட்சினம் வரைவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------------

(i) மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சொந்தமான 7 வாகனங்களை ஓட்டத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ii) திணைக்கள வளவில் 2018 செப்டம்பர் 16 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 4 மோட்டார் சைக்கிள்கள் தலைமை அலுவலக வளவில் உக்கக்கூடிய நிலையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

**2.5 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 28 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் மூலம் வழங்கியிருந்த அறிவுரையின் பிரகாரம் செலவுகளை முகாமைத்துவம் செய்யாமையால் 19 மீண்டுவரும் செலவு விடயங்களில் சேமிப்பு ரூபா 7,433,730 இற்கான பொறுப்புகளுக்கு கடப்பாடு ஏற்பட்டிருந்தது.

(ஆ) செலவு கட்டுபாட்டின் காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு பிரயாணச் செலவு விடயத்தின் கீழ் நிகழ்ச்சி திட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் முறையே ரூபா 1,832,510 தொகை மற்றும் ரூபா 1,304,300 தொகை மீண்டு வரும் செலவுவிடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் வருட இறுதியில் ஏற்பாடுகள் இன்மையால் பிரயாண செலவுகளுக்காக ரூபா 1,723,191 இற்கான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

**2.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

நிதிப் பிரமாணம் 110 பிரிவின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருந்த போதிலும் ரூபா 830,993 இற்கான 5 வாகன விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் ஏதும் அப்பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

**2.7 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

திணைக்களத்திற்கு உரிய 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காட்டிய குறைபாடுகள் தொடர்பாக அமைச்சினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | தொடர்புடைய விடயம் |
|---|---|
| பந்தி இலக்கம் | |
| (அ) பந்தி 3.2 | 1998 இன் 24 இலக்க தொல்பொருள் (திருத்திய) கட்டளை சட்டத்தின் பிரிவு 16(1) இன் பிரகாரம் தொல்பொருளியல் இடங்கள் என இனங்கண்டிருந்த ரஜமஹா விஹாரைகள் மற்றும் புராண விஹாரைகளின் தகவல்கள் சமர்பித்திருக்காமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | பந்தி 3.3.2 | மத்திய கலாச்சார நிதியத்தில் இருந்து கிடைக்கும் பணம் தொல்பெருளியல் கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்காக முறையான நடைமுறை ஒன்று ஏற்படுத்துதல். |
| (இ) | பந்தி 3.8 (ஈ) | தொல்பொருளியல் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற இணைய தளத்தை நாளதுவரை ஆக்கப்படாமை. |
| (ஈ) | பந்தி 3.09 (அ) | தம்புள்ள குகை விஹாரையின் பாதுகாப்புக்காக 2014 ஆண்டின் போது வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி அதன் வேலைகளை முடிக்க வேண்டுமெனினும் 2017 திசெம்பர் 31 திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

**2.8 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டு முன்னைய ஐந்து வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 572.75 | 571.68 | 1.07 | 0.18 |
| | மூலதன | 172.45 | 123.97 | 48.48 | 28.11 |
| | **மொத்தம்** | **745.20** | **695.65** | **49.55** | **6.65** |
| 2014 | மீண்டுவரும் | 662.55 | 659.90 | 2.65 | 0.40 |
| | மூலதன | 168.29 | 154.84 | 13.45 | 7.99 |
| | **மொத்தம்** | **830.84** | **814.74** | **16.10** | **1.94** |
| 2015 | மீண்டுவரும் | 849.50 | 824.88 | 24.62 | 2.90 |
| | மூலதன | 151.50 | 86.07 | 65.43 | 43.19 |
| | **மொத்தம்** | **1001.00** | **910.95** | **90.05** | **9.00** |
| 2016 | மீண்டுவரும் | 873.49 | 872.15 | 1.34 | 0.15 |
| | மூலதன | 165.50 | 130.51 | 34.99 | 21.14 |
| | **மொத்தம்** | **1038.99** | **1002.66** | **36.33** | **3.50** |
| 2017 | மீண்டுவரும் | 892.70 | 891.93 | 0.77 | 0.09 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதன | 66.10 | 50.58 | 15.52 | 23.48 |
| **மொத்தம்** | **958.80** | **942.51** | **16.29** | **1.70** |

**ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தியிருக்காமை**

2017 ஆண்டின் போது இரண்டு செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 4.5 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாடுகளில் எதுவும் பயன்படுத்தப்படாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.9 அரச ஊழியர்களுக்கான முற்பண கணக்கு**

திணைக்களத்திற்கான 20701 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 45 | 40.7 | 30 | 34.8 | 150 | 104.5 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த இணக்க கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 4,401,933 தொகை ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதி ஒரு வருடம் முதல் 16 வருடங்கள் வரை கால வீச்சு முதல் காணப்பட்ட போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக தொடர் நடவடிக்கை அலுவல்கள் பலவீன நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) தற்போது திணைக்கள சேவையில் காணப்படாத இரண்டு உத்தியோகத்தர் களிடம் அறவிடப்பட வேண்டிய 1 வருடத்தை விட மிகையான ரூபா 186,719 தொகைக்கான 2 இடர் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதில் ஒரு உத்தியோகத்தர் சேவையில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் எனவும் விடுவிக்கப்படுவதை அங்கீகரிக்கும் போது தாபனக் கோவையின் xxiv அத்தியாயத்தில் 4.8 பிரிவின் பிரகாரம் இடர்கடன் மீதியை அறவீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 672,214 தொகை ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 88 சதவீதம் அதாவது ரூபா 595,982 தொகை 5 வருடங்களை மிகைத்துள்ள மீதிகளாகும் என அவதானிக்கப்பட்டது.

## 2.10 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட 02 பொது வைப்புக்கு கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 232 மில்லியன் தொகையாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதி அளவில் நாடு பூராகவும் தொல்பொருளியல் பாதுகாப்பு கருமங்களுக்காக மத்திய கலாச்சார நிதியத்தில் இருந்து, நீர் பாசனத் திணைக்களத்தில் இருந்து, வேறு நிறுவனங்களில் இருந்து மற்றும் ஆட்களிடமிருந்து கிடைத்த அந்த கருமங்களை நிறைவேற்றாமையால் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 229.19 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அதில் அடங்கியுள்ள 03 வருடங்களை விட கூடிய பெறுமதி ரூபா 22.22 மில்லியன் ஆகும்.

(ஆ) பிணை வைப்புக்கள், தடுத்து வைத்தல்கள் மற்றும் ஏனைய திருப்பி செலுத்த வேண்டிய வைப்புகளின் பெறுமதி ரூபா 2,160,897 தொகையாக காணப்பட்டதுடன் அது அடங்கியுள்ள 2 வருடங்களை விட மிகையான மீதிகளின் பெறுமதி ரூபா 244,439 ஆகும் .

## 2.11 வங்கி கணக்குகளை நெறிப்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) செயற்படாத வங்கி கணக்குகள்**

திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நடைமுறை கணக்கு ஒன்று 2017 திசெம்பர் 31 திகதி அளவில் செயற்படாது காணப்பட்டது.

**(ஆ) சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தினால் 2017 ஆண்டின் போது செயற்படுத்தியிருந்த 05 வங்கிக் கணக்குகள் தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றுக்களை பரிசோதனை செய்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 2,489,855 தொகையாக காணப்பட்டதுடன் 06 மாதங்களை மிகைத்த பெறுமதி ரூபா 978,266 ஆகும்

(ii) கொழும்பு தலைமை அலுவலகத்தில், கண்டி, அனுராதபுர ஆகிய இரண்டு பிராந்திய அலுவலகங்களின் வங்கி கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள 145 காசோலைகள் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 2,257,832 தொகை ஆகும். இந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததிருக்கவில்லை.

(iii) தேறப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 1,351,132 தொகையாக காணப்பட்டதுடன் அதில் 2016 ஆண்டிற்கான ரூபா 600,237 பெறுமதியும் அடங்கியிருந்தது.

(iv) மேலே (ii) காட்டப்பட்டுள்ள காசோலைகளில், தலைமை அலுவலகத்தை சேர்ந்த ரூபா 410,089 தொகைக்கான 11 காசோலைகள் 2018 மே 04 ஆந்

திகதி வரை நிதிப் பிரமாணம் 388(3) இற்கு முரணாக வாடிக்கையாளருக்கு கொடுக்கப்படாமல் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

### 2.12 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

நிதிப் பிரமாணம் 447(1) மற்றும் நிதிப் பிரமாணம் 447(3) இன் பிரகாரம் நிறுவனத் தலைவருக்கு செலவுகளை கட்டுபடுத்தக் கூடிய விதமாக மீதியாக இருக்கும் பணத் தொகையை காட்டக் கூடிய முறையில் முறைசார் விதமாக வாக்குப்படி பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.13 உள்ளக கணக்காய்வு

2016 ஆண்டு முதல் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.14 மனித வள முகாமைத்துவம்

#### 2.14.1 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேலே 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 808 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 408,493 தொகையாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்க ப்பட்ட பதவி யணியினர் | உள்ளபடி யான பதவி யணியினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | மிகை பதவியணி | முடிவாக்கு வதற்கு எதிர் பார்த்துள்ள பதவிகள் |
|---|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 53 | 12 | 41 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 56 | 31 | 25 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 812 | 550 | 217 | - | 45 |
| (iv) | ஆரம்ப நிலை | 1569 | 1410 | 152 | - | 07 |
| (v) | அமைய/ ஒப்பந்த | - | 01 | - | 01 | - |
| | மொத்தம் | 2490 | 2004 | 435 | 01 | 52 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மேலதிக பணிப்பாளர் நாயகம், 8 பணிப்பாளர் பதவிகள், 16 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பதவிகள், 01 வரைபு வரைஞர் , 8 தொல்பொருளியல் உருவ

வரைஞர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தி அமைப்பதற்கு வினவி இருந்த போதிலும் அஙகீகாரத்தை பெறுவதில் தாமத்தின் காரணமாக இந்த பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்றது.

(ஆ) 64 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 01 நூலக அதிபர் பதவி, 11 தகவல் தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள், 12 அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் என 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவற்றை நிரப்பும்படி 2015 ஆண்டு முதல் பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அறிவித்திருந்த போதிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2016 மார்ச் 18 திகதி வரை 75 தொழிநுட்ப உதவியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஆண்டு வரையும் ஆள் சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்திற்கான பதவிகள் ஆகிய பிரதி/ உதவி பணிப்பாளர் பதவிகள் (SL-1) இற்காக வரையறுக்கப்பட்ட போட்டி பரீட்சை ஒன்று நடாத்துவதற்காக ஒழுங்குபடுத்தியிருந்த போது திணைக்களத்தில் MN-04 சேவை வகுப்பை சேர்ந்த உத்தியோகத்தர்களினால் உயர்நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்திருந்தமையால் கால வரையொன்று இன்றி பரீட்சையை பிற்படுத்துவதற்காக நேரிட்டிருந்தது. இதன் காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் இருந்ததுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்துவதற்காக கோரப்பட்டுள்ளது.

**2.15 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு**

நிதிப் பிரமாணம் 880 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.